மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்த யோசனையைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்கிறேன். அவையில் வைப்பதா இல்லையா என்பதைப்பற்றி விரைவில் முடிவு எடுத்துச் சொல்கிறேன்.

'A' and 'B' Wing Teachers

* 133 Q—THIRU D. SANTOSHAM (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, the Director of School Education has directed the Chief Educational Officers in the Districts not to allow 'A' Wing teachers to work in 'B' Wing posts and *vice versa*, and

(b) if so, the action taken thereon by the Chief Educational Officers?

'ஏ', 'பி' பிரிவு ஆசிரியர்கள்

திரு. டி. சந்தோஷம் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 'ஏ' பிரிவு ஆசிரியர்கள் 'பி' பிரிவு பதவிகளிலும் 'பி' பிரிவு ஆசிரியர்கள் 'ஏ' பிரிவு பதவிகளிலும் பணியாற்ற அனுமதிக்க வேண்டா மென மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் உத்திரவிட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் மீது முதன்மைக் கல்வி அதிகாரிகள் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அரசாணை நிலை எண் 761 கல்வித் துறை, நாள் 16—5—1970-ன் படி 'ஏ' பிரிவு ஆசிரியர்களை 'பி' பிரிவுக்கோ, 'பி' பிரிவு ஆசிரியர்களை 'ஏ' பிரிவுக்கோ மாற்றம் செய்யக் கூடாது. இருப்பினும் சில முதன்மைக் கல்வி அலுவலர்கள் 1970-76-ல் அத்தகைய மாற்றங்களைச் செய்துள்ளனர். 15—4—1977-ல் வெளியிட்ட அரசுக் குறிப்புரைகளின்படி இம்முறைகேட்டைச் சரிசெய்யும்படி முதன்மைக் கல்வி அலுவலர்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(இ) முதன்மைக் கல்வி அலுவலர் அரசுக் குறிப்புரைக்கேற்ப இம் முறைகேட்டைச் சரிசெய்து வருகின்றனர்.

1978 பிப்ரவரி 25]

திரு. டி. சந்தோஷம்: பல ஆண்டுகளாகவே இந்த 'ஏ' பிரிவு ஆசிரியர்களையும், 'பி' பிரிவு ஆசிரியர்களையும், இணைத்து ஒன்றுபடுத்த வேண்டும் என்ற முயற்சி நடந்து வருகிறது. ஆனல் இப்போது குறிப்பிட்டுள்ள உத்தரவு அந்த இணைப்பு முயற்சிக்கு மாறுபட்டு இருக்கிறது. இந்த இரண்டு பிரிவுகளையும் இணைப்பது கைவிடப்பட்டதா அல்லது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இணைப்பைப் பற்றிய நடவடிக்கை கைவிடப்படவில்லை. நிச்சயம் அது வரும். அந்த இணைப்பு ஏற்படுகின்ற வரைக்கும் தான் இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, these 'A' and 'B' Wings were formed in the year 1966 and we are now in the year 1978. May I know what the practical difficulties in achieving integration of the 'A' and 'B' wings are?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நடைமுறை விதிகளை ஆராய்ந்து விரைவிலே அது பற்றிய உத்தரவு வரும். கூடிய விரைவில் இணைப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்காலிங்கம்: இப்போது 'ஏ' பிரிவு ஆசிரியர்கள், 'பி' பிரிவு பள்ளிகளிலேயும் பணி புரிகிறார்கள். 'பி' பிரிவு ஆசிரியர்கள், 'ஏ' பிரிவு பதவிகளில் பணிபுரியக்கூடாது என்று உத்தரவு இருக்கிறது. தற்போது 'ஏ' பிரிவு ஆசிரியர்கள் 'பி' பிரிவு பதவிகளிலே பணி செய்யக் கூடாது என்ற விதி உள்ளதா? 'பி' பிரிவு பதவிகள் எத்தனை, 'ஏ' பிரிவு பதவிகள் எத்தனை மாநிலம் முழுவதும் இருக்கின்றன என்ற விவரத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: முழு விவரம் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட வேண்டும். 'ஏ' பிரிவு ஆசிரியர்கள் 'ஏ' பிரிவு பதவிகளிலும், 'பி' பிரிவு ஆசிரியர்கள் 'பி' பிரிவு பதவிகளிலும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த அந்தப் பிரிவுகளுக்குள்ளேயே மாற்றம் செய்யப்படுகிறார்கள். 'பி' பிரிவு ஆசிரியர்கள் 'பி' பிரிவு பள்ளிகளில்தான் மாற்றம் செய்யப்படுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.